**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 32/2019**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **23.01.2026** |
| **பெயர்** | **மோகனவிக்னேஷ்** |
| **த/பெ** | **ஜெகதீஷன்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.56 a.m**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

10. 2019 ம் ஆண்டு எதற்காக எந்த அவசியமின்றி வில்லங்கம் போட்டுப்பார்த்தோம் என்றால் நிலத்தினை விற்பனை செய்யலாம் என்ற எண்ணத்தில் போட்டுப்பார்த்தோம். பக்கத்தில் உள்ளவர்கள் நிலத்தில் உரிமை கோருகிறார்கள் என்று பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வகையில் அவர்களின் பெயரை குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது. மேற்சொன்ன சங்கதியை என் தயாரிடம் கூறினார்களா அல்லது எங்களிடம் கூறினார்களா என்றால் எங்களிடம் தான் கூறினார்கள். என் தந்தை இறந்த போது என் பாட்டி கோவிந்தம்மாள் உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் தான் இருந்தார்.

11. என் தந்தையின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என் பாட்டி கோவிந்தம்மாள் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என் பாட்டி கோவிந்தம்மாளுக்கு என் தந்தையை தவிர வேறு பிள்ளைகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். எத்தனை பேர் என்றால் என் தந்தையுடன் உடன் பிறந்தவர்கள் 2 சகோதர்கள், 2 சகோதரிகள் ஆவர். அவர்களுடன் பேச்சு வார்த்தை உண்டா என்றால் உண்டு. என்படி என் தந்தை இறந்தபோது மேற்சொன்ன பிள்ளைகள் என் பாட்டியின் வாரிசுகள் என்றால் சரிதான்.

12. 1998 ல் என் தந்தை இறந்தபோது என் பாட்டி கோவிந்தமாளுக்கு வழக்கு சொத்தில் உரிமை இருந்ததா என்றால் உரிமை இருந்தது. 1999 ல் கோவிந்தம்மாள் இறந்தபிறகு அவரின் பங்கை பொறுத்த வரையில் வாதிகளாகிய எங்களுக்கும், கோவிந்தம்மாளின் பிற வாரிசுகளுக்கும் அவர் பங்கில் உரிமை உள்ளதா என்றால் உரிமை இல்லை. காரணம் என் தந்தை சம்பாதித்த சொத்து என்பதால் என் பாட்டியின் பிற வாரிசுகளுக்கு அதில் உரிமை இல்லை.

13. 17.06.2019 தேதியிட்ட வா.சா.ஆ 8 ஆன வில்லங்க சான்றிதழ் 2018 ல் தான் பதிவிறக்கம் செய்து பார்த்தோம் அதை யார் பார்த்தது என்றால் தெரிந்தவர் மூலம் வில்லங்கம் போட்டுப் பார்த்தோம். என் தயார் உடன் சென்று பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. வா.சா.ஆ 8 ஆவணத்தில் என் தாயார் கையொப்பம் தான் விண்ணப்பதாரராக உள்ளது என்றால் தெரிந்தவர் மூலம் என் தாயார் போட்டுப்பார்த்தார். வில்லங்கத்தை என் தாயாரே நேரடியாக பார்த்தாரா அல்லது தெரிந்தவர் மூலம் கேட்டு தெரிந்து கொண்டாரா என்றால் ஒரு நாள் கழித்த வில்லங்கத்தை வாங்கி படித்துப்பார்த்தோம். அவ்வாறு படித்துப்பார்த்தபோது தான் ரங்கநாதன் மீது ஏற்பட்ட கிரையப்பத்திரம் 2 ம் பிதிவாதியின் மீது ஏற்படுத்தப்பட்ட கிரையம் என எங்களுக்கு தெரிய வந்தது.

14. அவ்வாறு தெரிந்த பிறகு தான் வா.சா.ஆ 8 மற்றும் வா.சா.ஆ 10 ஆவணங்களளை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம். வா.சா.ஆ 9 ஆவணம் என்தாயார் நேரடியாக வாங்கி பார்த்த ஆவணமா என்றால் வேறு ஒரு நபர் மூலம் தெரிந்து கொண்ட ஆவணம் ஆகும். வா.சா.ஆ 8 மற்றும் வா.சா.ஆ 10 ஆவணங்கள் இரண்டுமே 17.06.2019 அன்றே விண்ணபித்துப் பார்த்ததாக உள்ளது என்றால் சாட்சி அதனை பார்வையிட்ட பிறகு ஆம் என்று கூறினார். வில்லங்கம் போட்ட பிறகு தான் வா.சா.ஆ 9 மற்றும் வா.சா.ஆ 10 ஆவணங்கள் நான் பார்த்ததாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

15. வா.சா.ஆ 9 ஆவணத்தின் அசல் பத்திர முன்னிலையில் என் தாயார் அவருக்காகவும் அவருடைய மக்களாகிய 2 முதல் 4 வாதிகள் சார்பாகவும் 1 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை உரிய கிரையம் செய்து கொடுத்தது உண்மை என்றால் சரியல்ல. ஏற்கனவே வா.சா.ஆ 8 , 9, 10 ஆவணங்கள் குறித்து என் தாயாருக்கு தெரிந்திருந்த காணரத்தினால் தான் அதனை விண்ணப்பித்த தேதியிலேயே அதன் சான்றிட்ட நகல் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மை என்றால் என் தாயாரின் கையெழுத்து வா.சா.ஆ 9 ஆவணத்தில் உள்ளது அவர் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளது இவ்வழக்கின் பிராதில் என் தாயார் போட்டுள்ள கையெழுத்து தான் ஒத்துள்ளது என்றால் சரியல்ல.

16. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்களை நான் தெரிந்த கொண்டோனா என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ 9 ஆவணம் 2002ல் ஏற்பட்டுள்ளது அதேபோல் வா.சா.ஆ 10, 2007ல் ஏற்பட்டுள்ள் விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் ஆவணத்தை பார்த்த பிறகு தான் தெரியும். வழக்கு சொத்திற்கு பட்டா மாற்றம் செய்ய எந்த காலத்திலும் நான் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஏற்கனவே புதிய சர்வே எண் 11/1எ , 1 பி என்று ரங்கநாதன் பெயரில் பட்டா எண் 1532 என்று மாற்றம் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் பிறகு தெரிந்து கொண்டேன். அந்த பட்டா குறித்து வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எங்களின் அனுமதி இல்லாமல் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

17. 2004லிலேயே பட்டா மாற்றம் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் மாறியுள்ளதாக தெரியும், வருடம் தெரியாது. வழக்கு சொத்தை அனுபவித்ததாக கூறும் நிலையில் எப்படி அனுபவித்தோம் என்றால் வழக்கு சொத்து பார்வையிட்டும் அதில் வளர்ந்திருக்கும் புற்களை வெட்டியும் அனுபவித்து வந்தோம். வழக்கு சொத்தில் ஏதேனும் பயிர் செய்து வந்தோமா என்றால் இல்லை. அவ்வாறு இருக்யையில் என பிரமாணவாக்குமூலத்தில் நான் பயிர் செய்ததாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் தவறு தான். பிரதிவாதிகள் அவர்களின் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு நான் மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

18. 2ம் பிரதிவாதி அவருடைய பதிலுரையில் அவருடைய கணவர் ஏகாம்பரம் அவர்களுகும் பழநி என்பவருக்கும் தகறாறு ஏற்பட்டு அதன் காரணமகா 2ம் பிரதிவாதி பழநி என்பவருக்கும் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 368/2009 எனும் வழக்கை தாக்கல் செய்ததாகவும் பழநி என்பவர் பிரமிளா மீது பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 86/2015 என்ற வழக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளது பற்றி தெரிந்து கொண்டீர்களா என்றால் அந்த வழக்கை பற்றி எனக்கு தெரியும். மேற்சொன்ன வழக்கு குறித்து நான் என்ன கூறுகிறேன் என்றால் அதை பற்றி என்ன வழக்குகள் என்று எனக்கு தெரியாது. தெரிந்து கொள்ளவும் நான் முயற்சிக்கவில்லை என்றால் முயற்சிக்கவில்லை.

19. 2ம் பிரதிவாதி பிரமிளாவின் கணவர் ஏகாம்பரம் மற்றும் பழநி என்பரும் மீஞ்சூரில் மரசாமான்கள் தயார் செய்து விற்கும் தொழில் செய்து வந்தனர் என்றும் அவர்களுக்குள் ஏற்பட்ட தொழில பிரச்சினையால் விரோதம் ஏற்பட்டு 2ம் பிதிவாதியின் கணவரிடம் இருந்த தாவா சொத்திற்கான அசல் ஆவணங்களான வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 2, வா.சா.ஆ 9 அசல் ஆவணங்களை பழநி அவர் வசம் எடுத்து கொண்டு

அவர் தவறான ஆவணங்களை ஏற்படுத்தி மேற்சொன்ன வழக்குகள் நடந்தன என்றும் பிறகு அந்த ஆவணங்களை பழநி எங்கள் வசம் கொடுத்து எங்களுடன் சேரந்து கொண்டு அவருடைய தூண்டுதலின் பெயரில் தான் இந்த வழக்கு எங்களால் பிரதிவாதிகள் மீது தவறாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 9 ஆவணத்தில் என் தாயாரின் கையொப்பம் இருக்கும் போது அதை மறைக்கும் வகையில் என் தாயார் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மை வெளிவந்துவிடும் என்பதற்காக என் தாயார் இந்நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வராமல் நான் வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

20. என் தாயாரால் நீதிமன்றத்திற்கு ஆஜராகி அவருடைய இடது கை பெருவிரல் குறியை கொடுத்து வா.சா.ஆ 9 ஆவணத்தின் அசல் ஆவணத்தில் உள்ள கைநாட்டு இடது கை பெருவிரல் குறி அவருடையது அல்ல என்று நிரூபிக்க இயலுமா என்றால் இயலும். இந்த வழக்கு தவறான வழக்கு என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.35.p.m.**